**வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில்

தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றம் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும் மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு நியமத்தினால் அங்கீகரிக்கப்பட்டதை தவிர வேறெந்த வருமானங்கள் மற்றும் செலவுகளும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் ஒவ்வொன்றுடன் தீர்க்கப்படக் கூடாது போதிலும் ரூபா 1,912,508 ஆன விற்பனை முற்பணங்கள் கிடைப்பணவு கடன் பட்டோருக்கு ஈடு செய்யப்பட்டு நிதி கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | கடன் பட்டோர் முற்பண கிடைப்பணவுகள், கடன் பட்டோரிடமிருந்து நீக்கப்பட்டு விற்பனை முற்பணங்கள் தொகை கணக்குக்கு மாற்றப்பட்டு 2024 ஆம் வருடத்திலிருந்து பேணப்பட்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு நியமத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது அல்லாமல் எந்த சந்தர்ப்பத்திலும் வருமானங்கள் மற்றும் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் ஒவ்வொன்றுடன் ஈடு செய்யப்படக்கூடாது. |
| (ஆ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அசையாத மற்றும் மெதுவாக அசைகின்ற ரூபா 4,016,289 ஆன இருப்பு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் சேதத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதான அலுவலகத்தில் காணப்படுகின்ற இந்த இருப்பு முறையான நடைமுறைகள் மூலம் லொட்டாக்கப்பட்டு விற்பனைக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இருப்பு தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 7ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 17,293,888 ஆன வருட இறுதி நிலையான வைப்பின் பெறுமதி வருட இறுதி பணம், பணம் மற்றும் அதற்கு சமனானவை கணக்கீட்டின் போது கவனத்தில் | 2024 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றினுள் சீர் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் முதலீடுகள் பணம் மற்றும் பணத்துக்கு சமனானவை என அடையாளப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் காசு பாய்ச்சல் கூற்றில் 2023 டிசம்பர் 31 ஆம் தேதி பணம், பணம் மற்றும் அதற்கு சமமானவை ரூபா 17,293,888 கூடுதலாக சித்தரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் தேறிய பெறுமதி சூனியமான மேலும் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற ரூபா 116,710,664 ஆன ஆதணங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாட்டுக்கான வாழ்நாள் 2024 ஆம் வருடத்தினுள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு சீராக்கும் மேற்கொள்ளப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாட்டுக்கான வாழ்நாள் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிதி நிலமைக் கூற்றில் முதலீடாக காண்பிக்கப்பட்ட ஸ்ரீ பங்கலா போட் கூட்டுமுயற்சிக்குரிய ரூபா 1,961,850 ஆன இழப்பீட்டு நட்ட ஒதுக்க செலவு குறிப்பு வியாபாரம் அல்லாத ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் இழப்பீட்டின் கீழ் ஆன சொத்துக்களில் நியாயமான சொத்துக்களில் இழிவுப் பெறுமதி நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு காண்பிக்கப்படாதிருந்தமையால் முதலீடாக காண்பிக்கப்பட்ட ஸ்ரீ பங்கலா போட்டுக்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 நிதி கணக்கீட்டினுள் இழப்பீட்டு நட்டம் அல்லது சொத்துக்களின கொள்வனவு பெறுமதியை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டின் கீழ் ஆன சொத்துக்களில் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | மன்றத்தின் முதலீட்டு சொத்துக்களான மட்டக்குளி காணி, மத்துமகல காணி மற்றும் காரைநகர் படகு தரப்பிடம் ஆகிய சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 75 மற்றும் 79 பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு சொத்துக்களாக காட்டப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்கள் ஆதனங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கூட்டி காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கு நியமம் 40 பந்தி இலக்கம் 75 மற்றும் 79 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் முதலீட்டு சொத்துக்களாக காட்டப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முதலீட்டு சொத்துக்கள் நியமத்தின் பிரகாரம் நிதி கூற்றுகளில் முதலீட்டு சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் கம்பெனி ஒன்றிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 452,000 ஆன கிடைக்கப் பெறவேண்டிய வாடகை வருமானம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்களாக கணக்கிடப்படாமல் வியாபார கடன் பட்டோராக கணக்கிடப்பட்டிருந்தது. | கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானங்கள் வியாபார கடன் கணக்கிலிருந்து வேறுபடுத்தி கிடைக்கப் பெற வேண்டிய வருமானமாக 2024 ஆம் வருடத்தில் கணக்கிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் ரூபா 84,987,791 ஆன உள்ளவாரான வியாபார கடன் பட்டோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்ட காலத்திலிருந்து அறவிட்டு கொள்வதற்கு முடியாத கூட்டு மொத்தம் ரூபா 15,356,603 ஆன கடன் பட்டோர் தொடர்பாக ஐயக்கடன் ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்திற்கான பழைய கடன் பட்டோரின் செலுத்தும் வல்லமையை கண்டறிந்து ஐயக்கடனை ஒதுக்குவதை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீண்ட காலத்திலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு முடியாத கடன் பட்டோர் தொடர்பாக ஐயக்கடன் ஒதுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 1,990,047 ஆன ஏனைய பெறு வனவுகள் தொடர்பாக எவ்வித சாட்சி ஒன்றும் மன்றத்தில் காணப்படவில்லை என்பதுடன் நீண்ட காலத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற இந்த மீதிகளை அறவிட்டு கொள்ளுதலுக்காக அல்லது அந்த மீதிகளுக்காக ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. | பண்ட முற்பண பெறுகைகள் மற்றும் ஏனைய பெறுகைகளுக்காக 10 வருடங்களை விட பழைய மீதிகளை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து 2024 ஆம் ஆண்டின் கணக்கீட்டு வருடத்தினுள் ஒதுக்கமொன்றை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீண்ட காலத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற ஏனைய பெறு வனவுகள் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்காக அல்லது அந்த மீதிகளுக்கான ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2013ஆம் வருடத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 28,901,200 ஆன ஏனைய முற்பண மீதி கணக்காய்வுதிகதியான 2024 நவம்பர் 05ஆம் திகதியிலும் அற விடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அதற்காக ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தின் நிதி கூற்றினுள் தீர்ப்பன செய்யப்படாத பழைய மீதிகளுக்காக ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஏனைய முற்பணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மன்றத்தினால் வருட இறுதி பிற்போட பட்ட வருமானமான ரூபா 163,906,027 ஆன மீதி, பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதியுடன் சேர்க்கப்பட்டு பிற்போடப்பட்ட பொறுப்பாக நிதி நிலைமை கூற்றினுள் காட்டப்பட்டதன் | 2024 நிதி கணக்கீட்டினுள் சரியாக சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிட் போடப்பட்ட வருமானங்கள் நிதி நிலைமை கூற்றினுள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் உரிய தகவல்கள் நிதி கூற்றினுள் போதுமான அளவில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | வரையறுக்கப்பட்ட சீ-னோர் மன்றத்துக்கு உரிய மட்டக்குளி களஞ்சிய கட்டிடம் தனியார் கம்பெனி ஒன்றுக்கு மாதம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் சென்ற வருடத்திற்காக கிடைக்கப்பெற்றிருந்த நிலுவை குத்தகை வாடகை வருமானம் ரூபா 1,600,000 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,600,000 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2023.01.01 இருந்து 2023.07.30 வரை நிலுவை களஞ்சிய வாடகை 2023 ஆம் வருடத்திற்கு அடையாளப் படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகை 2022ஆம் வருடத்தின் இலாப நட்ட கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காலத்திற்குரிய குத்தகை வாடகை வருமானம் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும் |
| (எ) | நிதிக்கூற்றில் நிறைவு செய்யப்பட்ட பொருட்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்காக நிறைவு செய்யப்பட்ட 24Feet Ambulance கப்பல் கொள்வனவாளரினால் நிராகரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக 2020 ஆம் வருடத்திலிருந்து மட்டக்குளி படகு தளத்தினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலே அதன் இயந்திரம் மாத்திரம் ரூபா 1,020,000 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதியான பணம் வரவு வைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது விற்பனையின் இலாபம் அல்லது நட்டத்தை அடையாளம் கண்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 24Feet Ambulance வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரம் செயலிழந்த நிலைமையில் காணப்பட்டதுடன் அதை மிக விரைவில் விற்பனை செய்யப்பட்டது. அதனால் அந்த இயந்திரத்தின் பெறுமதியான ரூபா 1,020,000 தொகைக்கு முறையான நடைமுறையின் கீழ் விற்கப்பட்டது. அதன் பணம் பெறுவனவுடைய 33823 பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்த முடியும். | இயந்திரத்தை விற்ற இலாபம் அல்லது நட்டத்தை அடையாளப்படுத்தி சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | கடற் தொழில் அமைச்சினூடாக நன்கொடை ஒன்றாக சீ-னோர் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காரைநகர் கப்பல் கட்டும் தளத்தின் ரூபா 56,517,480 ஆன கட்டிடத்தின் பெறுமதி பணம் வெளிசெல்லள் ஒன்றாக காட்டப்பட்டிருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுகளினால் ஆன தேறிய காசு பாய்ச்சல் ரூபா 56,517,480 ஆள் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2024 நிதி கூற்றினுள் சீர் செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | முதலீட்டு செயற்பாடுகளினால் ஆன தேறிய காசு பாய்ச்சல் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஐ) | 090010002143ஆம் இலக்க வங்கி கணக்கில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் வங்கி இணக்க பரிசீலனையின் போது 2018 மற்றும் 2019 வருடங்களின் வங்கிக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 1,583,550 பெறுமதியிலான அடையாளப்படுத்தப்படாத கிடைப்பணவுகளை அடையாளப்படுத்தி | இந்த பணத்தை வைப்புச் செய்துள்ள வாடிக்கையாளர் பண வைப்பு செய்ததற்கான எவ்வித ஆவணம் ஒன்றையும் வாய்மொழி மூலமாக அல்லது எழுத்து மூலமாக முன் அறிய தரவில்லை என்பதுடன் எங்களினால் இந்த செலவு | அடையாளப்படுத்த ப்படாத கிடைப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக தேடிப் பார்த்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஒ) | 2007 ஆம் வருடத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற வருமான வரிக்கான ஈடு செய்யும் காலம் விஞ்ச பட்டிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,712,826 ஆன பொருளாதார சேவை கட்டணம் செலவொன்றாக கருதப்பட்டு சீர் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் சீர் செய்யப்படாதிருந்ததுடன் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் (other payable) மற்றும் தடுத்து வைக்கப்பட்ட நட்டம் அந்த அளவில் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2024 கணக்கினுள் பொருளியல் சேவைகள் கட்டண மீதி ரூபா 3,712,826 ஆன தொகையை தடுத்து வைக்கப்பட்டுள்ள இலாபத்தினுள் தீர்வு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஈடு செய்யும் காலத்தை விஞ்சியுள்ள கொடுக்கல் வாங்கல்களை சரியாக அடையாளப்படுத்தி தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | ரூபா 10,406,699 ஆன தேசத்தை கட்டி எழுப்பும் வரி மீதி 2018 ஆம் வருடத்தில் இருந்து வேறுபாடு இன்றி காணப்படுகின்ற மீதி ஒன்றாக காணப்படுவதுடன் இது தொடர்பாக தேடிப் பார்த்து கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்குள் சீர் செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய மீதியை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஔ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் தடுத்து வைக்கும் வரி மீதியான ரூபா 6,309,128 இல் இருந்து ரூபா 1,119,030 ஆன மீதி ஒன்றுக்காக மன்றத்திடம் வரி சான்றிதழ் காணப்படவில்லை என்பதுடன் தேசிய இறை வரி திணைக்களத்தினால் இ ந்த வரித்தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளுதல் நிச்சயத்தன்மையற்ற நிலையில் காணப்படுவதுடன் இந்த மீதியை தீர்வு செய்து கணக்குகளில் சீராக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி மீதி 2024 ஆம் வருடத்தினுள் தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (க) | மன்றம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றல்லாத போதிலும் 2022ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டதன் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ள (உள்ளீட்டு வரி) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 7,322,051 ஆன மீதி ஒன்று ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளின் (other payables) கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை தீர்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை. | Tax Account இல் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய மீதி சரியாக அடையாளம் கண்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | நீண்ட காலமாக காணப்பட்டு வருகின்ற ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் வரவு மீதியாக காட்டப்பட்டுள்ள ரூபா 19,042,001 ஆன பெறுமதி சேர் வரி மீதியை தீர்ப்பனவு செய்து கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு உப பதிவேடு பெற்றுக் கொடுக்கப்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கி) | 2018 முதல் 2022 வரையான காலப்பகுதிக்குரிய தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் விநியோகிக்கப் படுகின்ற பட்டியல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,219,040 ஆக இருந்த போதிலும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 971,100 காண்பிக்கப்பட்டதன் காரணமாக செலுத்த வேண்டிய நிலுவைக் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 1,247,940 குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சிட்டைகள் கிடைக்கப்பெற்று இருப்பது ரூபா 971,100 க்கு மாத்திரம் என்பதனால் செலுத்துவதற்கு உள்ள மீதயாக காட்டப்படுகின்றது. 2021, 2022, 2023 ஆகிய வருடங்களுக்கான சிட்டைகள் இல்லை என்பதனால் ஒதுக்கங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய நிலுவை கணக்காய்வுக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கீ) | 2018 ஆம் வருடத்திற்காக சீ-னோர் உணவகத்தில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய இலாப பங்கான ரூபா 323,516 தொகையை 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. மேலும் 2023 நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 16 இன் கீழ் சீ-னோர் உணவகத்தில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தண்டப்பன வாடகை வருமானமாக ரூபா 10,025,000 ஏனைய கிடைக்கப்பெற வேண்டியதன் கீழ் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணம் கணக்கிடப்பட்ட முறை அல்லது அது தொடர்பான எவ்வித ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஜனவரி 03 ஆம் திகதிய கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் DRE(S)/00037/2023 வழக்கு தீர்ப்பின் பிரகாரம் குத்தகைதாரினால் கம்பெனிக்கு ஒரு நாளைக்கு ரூபா 5,000 வீதம் செலுத்துவதற்கு முடிவாயிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டு இருக்க வேண்டிய மொத்த பணம் ரூபா 10,025,000 ஆகும். | உணவகத்தில் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய இலாப மங்கை அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கு) | திக்கோவிட்ட மீன் பிடி துறைமுக செயல்திட்டத்திற்குரிய கடத்தொழில் அமைச்சினால் 2014 ஆம் வருடத்திலிருந்து கிடைக்கப் பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,527,823 வை இதுவரை அறவிட்டு இருக்கவில்லை என்பதுடன் அதற்காக ஐயக் கடன் ஒதுக்கீடும் மேற்கொண்டு இருக்கவில்லை. | இந்த திக்கோவிட்ட மீன்பிடி துறைமுக செயல் திட்டம் 10 வருடங்களை விட பழையது ஒன்றாக காணப்படுவதுடன் இது தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு கடத்தொழில் அமைச்சின் செயல்திட்ட பிரிவுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு கிடைக்கப்பெறுகின்ற பதிலின் அடிப்படையில் எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை அளவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | நிதிக் கூற்றின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள | 1,125,589,046 | 1,124,984,110 | 604,936 | நிதி கூற்றுக்களின் பிரகாரம் உப பதிவேடு தயாரிக்கும் போது வேறுபாடு ஒன்று காட்டப்படுகின்றது. இந்த வேறுபாடு 2024 கணக்கீட்டு வருடத்தினுள் சீர் செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் நேரொத்த அறிக்கைகளுக் கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்பு மீதி | 16,240,545 | 16,844,131 | 603,586 | பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | |
| (இ) | நிலையான வைப்பு வட்டி | 3,164,992 | 2,561,406 | 513,586 | நிலையான வைப்புத்தொகை முதிர்ச்சியடைவதற்கு முன்பே திரும்பப் பெறப்பட்டதால், 2023.10.24 வரை வட்டி மட்டுமே வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது. ஆனால் எங்கள் கோரிக்கையின் விளைவாக, எங்களுக்கு முழு வட்டித் தொகையும் வழங்கப்பட்டது. எனவே, நாங்கள் கணக்கிட்ட வட்டித் தொகை கணக்காய்வு செய்யப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் நேரொத்த அறிக்கைகளுக் கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | நலன்புரி சங்கத்தின் (welfare society) கணக்குகள். | 796,745 | 408,275 | 388,470 | 2024 நிதி கணக்குனுள் சேதம் விளைவிக்கும் நட்டத்தினுள் அல்லது சொத்துக்களின் பெறுமதி சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| விடயம் | | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கடன் பட்டோர் | 84,987,791 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | கடன் பட்டோர் முற்பணங்களின் பெறுவனவுகள் கடன் பட்டோரிலிருந்து நீக்கப்பட்டு விற்பனைகள் முற்பணங்கள் பண கணக்கிற்கு மாற்றப்பட்டு 2024 ஆம் வருடத்திலிருந்து பேணப்பட்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | பெறவேண்டிய வைப்புக்கள் | 616,113 | விரிவான பட்டோலை | பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மூலதன ஒதுக்கம் | 62,601,030 | | ரூபா 62,601,030.04 ஆன தொகை 2004 ஆம் வருடத்திலிருந்து நிதி கணக்குகளினுள் காணப்படுகின்ற பழைய மீதி ஒன்றாகும். | |
| (ஈ) | விற்பனை முற்பணங்கள் | 38,942,213 | விரிவான பட்டோலை | விற்பனைகள் முற்பணங்களின் மீதி இணக்கம் செய்யப்பட்டு உப பதிவேடு ஒன்று பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (உ) | ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 118,570 | | எங்கள் நிறுவனத்திடம் எவ்வித பதிவேடொன்றும் காணப்படவில்லை என்பதுடன் பணிப்பாளரின் அங்கீகாரம் தொடர்பாக சீர் செய்வதற்கு 2024 ஆம் வருடத்தினுள் எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஊ) | செலுத்தப்படாத சம்பளம் மற்றும் படிகள் | 393,121 | | ஊழியர்கள் தொடர்பாக தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தற்போதும் செயல்படுத்தப்படுவதுடன் வழக்கு தீர்ப்பில் மீதியை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (எ) | இலக்கம் 002010016031 வங்கிக் கணக்கு | 572,344 | வங்கி மீதி உறுதிப்படுத்தல் கடிதம | 2024 ஆம் வருடத்தில் ஆவணங்களை நாளது வரையாக்கப்பட்டு வங்கி மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் மேற்கொள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | பெறுமதிசேர் வரி | 11,719,950 | பேரேட்டு கணக்குகள் அல்லது விபரமான உப பதிவேடு | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு உப பதிவேடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ப்பட வேண்டும். |
| (ஐ) | வங்கி பிணைகள் | 9,360,155 | வங்கி உத்தரவாத கடிதங்கள் அல்லது மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் | வங்கி உத்தரவாதத்திற்காக நிதி பிரிவின் பாதுகாப்பான முறையில் Box File ஒன்று பேணப்பட்டு வருவதுடன் அதனூடாக உண்மை தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வல்லமை உள்ளது. | |
| (ஒ) | இலக்கம் 83302097 நிலையான வைப்பு கணக்கு | 17,293,888 | நிலையான வைப்புச் சான்றிதழ் அல்லது புதுப்பிக்கும் அறிவித்தல் | இந்த நிலையான வைப்பின் புதுப்பித்தல் அறிவித்தல் முன்பில் இருந்து நிதி முகாமைத்துவத்தின் மின்னஞ்சலுக்கு வங்கினால் அனுப்பப்பட்டுள்ளது. அது 2023 நடுப்பகுதியில் இருந்து சரி செய்யப்பட்டுள்ளது. 2023 அக்டோபர் 25ஆம் திகதி வட்டியை நிறுவனம் பெற்றுக்கொண்டு மீண்டும் சரியான அங்கீகாரத்தின் பின்னர் நிலையான வைப்பு ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய செலுத்த வேண்டிய வற்றின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 3,210,163 ஆன செலுத்த வேண்டிய தடுத்து வைக்கும் பணம் (Retention Payable) மீதியினுள் 12 வருடங்களை விட அதிக காலத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற நிறுவனம் மற்றும் 18 நபர்களுக்கு செலுத்த வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 2,938,158 ஆன மீதிகள் காணப்படுவதுடன் அந்த காலம் கடந்த மீதிகள் தொடர்பாக தேடிப் பார்த்து சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தினுள் அந்த பணம் தொடர்பாக சாத்தியவள ஆய் ஒன்றை மேற்கொண்டு அந்த மீதி காண சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாக காணப்படும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய செலுத்தப்பட வேண்டியதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டு மொத்தம் ரூபா 51,920,259 ஆன வைப்பு | 3 வருடங்களை விட அதிக மீதிகளை இணக்கம் செய்து கொடுப்பனவு தொடர்பான சாத்திய வளத்தை | காலம் கடந்த வைப்பு மீதிகள் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மீதிகளில் இருந்து 3 வருடங்களை விட அதிக காலம் கடந்துள்ள ரூபா 38,634,259 ஆன வைப்பு மீதி காணப்படுவதுடன் அந்த மீதிகள் தொடர்பாக தேடிப் பார்த்து தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலே நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | மேற்கொண்டு வருமானம் ஒன்றாக இனம் கண்டு 2024 நிதி கணக்குகளின் உள் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கூட்டிணைப்பு குறிப்பாணையின் 3.3 மற்றும் 3.5 ஆம் பந்திகள் | வரையறுக்கப்பட்ட சீ-னோர் மன்றம் ஐஸ் உற்பத்தி, கடல் சார் உற்பத்திகளை பொதி செய்தல், விற்பனை மற்றும் ஏற்றுமதிகள், மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் மற்றும் படகு உற்பத்தி மற்றும் விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும், படகு உற்பத்தியில் மாத்திரம் மேற்கொண்டு இருப்பதன் மூலம் மன்றம் நிறுவப்பட்டதன் நோக்கத்துக்கு அப்பால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கூட்டினைப்பு குறிப்பானை பிரகாரம் மன்றம் நிறுவப்பட்டுதலின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டிணைப்பு அகவிதியின் 53 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் அவ்வாறு வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கூட்டிணைப்பு அகவிதியின் படி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | கூட்டிணைப்பு அகவிதியின் 58 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவரை நியமித்தல் அவ்வாறு இடம்பெற்றிருக்க வில்லை. | | கூட்டிணைப்பு அகவிதியின் படி பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,482,963 மிகையாக இருந்ததுடன் அதற்கெதிரான முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 9,867,625 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய வருடத்திற்கு இணையாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் முன்னேற்றம் ரூபா 13,350,588 ஆகும். முன்னைய வருடத்திற்கு இணையாக ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் நூற்றுக்கு 50 இனால் அவ்வாறெனில் ரூபா 14,020,675 இனால் அதிகரித்தது இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய வருடம் மற்றும் நடப்பு வருடத்தின் நடைமுறை சொத்துக்களின் விகிதம் முறையே 1:1.43 மற்றும் 1:1.35 ஆகும். நடப்பு வருடத்தின் செலுத்த வேண்டிய ரூபா 22,007,450 வினால் அவ்வாறெனில் நூற்றுக்கு 28 இனால் மற்றும் வியாபார கடன் கொடுத்தோர் ரூபா 34,577,501 வினால் அவ்வாறெனில் நூற்றுக்கு 265 இனால் உயர்வடைந்திருத்தல் இந்த பின்னடைவுக்கு பிரதானமான காரணமாக காணப்பட்டது.

(ஆ) முன்னைய வருடம் மற்றும் நடப்பு வருடத்தின் உடனடி சொத்துக்களின் விகிதம் முறையே 1:0.8 மற்றும் 1:0.9 ஆகும் நடப்பு வருடத்தின் வியாபார கடன் பட்டோர் ரூபா 45,395,732 இனால் அவ்வாறெனில் நூற்றுக்கு 179 ஆல் அதிகரித்தல் விகித முன்னேற்றத்திற்கு பிரதான காரணம் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உப ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வதற்கு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 5,059,049 பெறுமதியான மீன் பிடி வலை உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் 2011 ஆம் வருடத்திலேயே பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 149,274 பெறுமதியான மீன்பிடி வலை மாத்திரம் மன்றத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், எஞ்சிய மூலப் பொருட்களின் ரூபா 4,909,775 பெறுமதியான மீன்பிடி வலைகள் இதுவரை கிடைக்கப் பெற்று இருக்கவில்லை. | 2011 ஆம் வருடத்தில் நோர்த் சி நிறுவனத்தின் ஊடாக தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நோர்த் சி நிறுவனத்துடன் எதிர்காலத்தில் கதைத்து சீர் செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உப பதிவேட்டின் பிரகாரம் 2017, 2018, 2019 மற்றும் 2021 ஆகிய வருடங்களிலே பண வரம்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மற்றும் காலாவதியான வங்கி பாதுகாப்பு | தீர்வையாக்கப்படாத பழைய வங்கி பாதுகாப்பினை இணக்கம் செய்யப்பட்டு 2024 நிதி கணக்குகளினுள் சரியாக பாதுகாப்பு பிணையின் பெறுமதியை சீர் செய்வதற்கு | பண வரம்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வங்கி பாதுகாப்பு பிணையின் பெருமதியை |

| | | | |
|---|---|---|---|
| | பிணையின் பெறுமதியான ரூபா 4,585,958 தீர்வையாக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தீர்வையாக்கப்பட்ட கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடத் தொழில் மற்றும் நீர்வள திணைக்களத்திற்கு இரண்டு படகுகளை நிறைவு செய்து கையளிப்பதற்காக கிடைக்கப்பெற்ற கட்டளை மன்றத்தினால் நோத் வெஸ்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த உடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் வருடத்திலேயே அந்த நிறுவனத்துக்கு ரூபா 30,321,343 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த இரண்டு படகுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு மன்றத்துக்கு கையளிப்பதற்கு நோர்த் வெஸ்ட் நிறுவனத்தினால் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை. | IMUL–A-0061–KMN, IMUL–A-0062–KMN என்ற இரண்டு படகுகள் கடத்தொழில் திணைக்களத்தின் மூலம் எங்களுடைய நிறுவனத்தின் ஊடாக உற்பத்தி செய்வதற்கு உள்ள 59.5 கலற் தொழில் படகுகள் இரண்டாகும். எமது நிறுவனம் 2017 ஆம் ஆகும் போது 59.5 படகுகள் 5 உற்பத்தி செய்வதற்கு உற்பத்தி செய்ததனால் நோத் வெஸ்ட் மெரின் நிறுவனத்திற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தது. கடற் தொழில் திணைக்களத்தினதும் இணக்கப்பாடு நோர்த் வெஸ்ட் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்த இரண்டு படகுகளையும் நிறைவு செய்து இன்னும் எங்களுக்கு கையளித்திருக்கவில்லை. 2024 ஆம் வருடத்தில் அதை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக நோர்த் வெஸ்ட் நிறுவனம் வாய்மொழியாக அறிவித்துள்ளது. | அந்த இரண்டு படகுகளின் வேலைகளை நிறைவு செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |